<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>

**<u>OS.No. 751 / 2022</u>**

பி.வா.சா.1. அருண்குமார் 18.03.2025

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:

நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது நான் உடன் இருந்தேனா என்றால் உடன் இருந்தேன். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு எனது தரப்பில் எந்தவித ஆட்சேபனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் நீதிமன்ற ஆணையர் அறிக்கை முழுவதையும் சரி என்று ஏற்றுக்கொள்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்யாத நிலையில் என்ன காரணத்திற்காக நீதிமன்ற ஆணையர் அறிக்கையை ஆட்சேபனை செய்கிறேன் என்றால் நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நான் படித்து பார்க்கவில்லை. வாய்மொழியாக கேட்டேன். நீதிமன்ற ஆணையர் அறிக்கை குறித்து எனது வழக்கறிஞரிடம் ஒருமுறை தகவல் கேட்டதோடு சரி. நான் நீதிமன்ற ஆணையர் அறிக்கையை முற்றிலும் நான் படித்து பார்த்துள்ளேன் என்றும் அதனை படித்து பார்த்த பின்பு தான் அறிக்கை சரியாக உள்ளது என்று நான் ஒப்புக்கொண்டு அதற்கு ஆட்சேபனை செய்யவில்லை என்றும் தற்போது மாறுபட்டு எனக்கு ஆட்சேபனை உண்டு என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை நானும் எனது தாயரும் தனிதனியாக கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். சர்வே எண்.130/2எ5 ல் நான் கிரையம் பெற்றுள்ளேனா என்றால் சர்வே எண்.130 சரிதான். ஆனால் உட்பிரிவு எனக்கு தெரியாது. சர்வே எண்.130/2எ5ல் தென்மேற்கு மூலையில் வடகது பார்த்து சுற்றுச்சுவருடன் கூடிய வீடு உள்ளது என்று நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த வீடு எனது கிரையத்திற்கு கட்டுப்பட்டது. அதன் கதவு எண்.103/153 என்றால் சரிதான். மின் இணைப்பு எண்.363 என்றால் சரிதான். குடியிருப்பு வீட்டில் தரைத்தளத்தில் டைல்ஸ் ஒட்டப்பட்டுள்ளது என்று நீதிமன்ற ஆணையர் அவரது

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வீட்டில் உள்ளே நுழைந்தவுடன் ஒரு வரவேற்பு அறை உள்ளது என்றால் சரிதான். தென்கிழக்குமூலையில் சமையல் அறை உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் சமயத்தில் அந்த சமையல் அறையில் 3 கேஸ் சிலண்டர், கேஸ் டவ், மற்றும் வீட்டு உபயோகபொருட்கள் இருந்ததாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வீட்டின் தென்மேற்கு பகுதியில் ஒரு படுக்கை அறை இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு பக்கத்தில் ஒரு பூஜை அறை உள்ளது என்றால் சரிதான். இந்த அமைப்புகளை காட்டக் கூடிய புகைப்படங்கள் 1 முதல் 7 ஆக ஆணையர் அறிக்கையுடன் இணைத்து தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் முழுமையாக பார்க்கவில்லை. நான் வாங்கிய கிரைய பத்திரம் தேதி 30.04.2014 என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் 2-ம் இலக்க சொத்தாக நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள குடியிருப்பு வீடு கிரைய பத்திரத்தின் சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தில் 2-ம் இலக்க சொத்தான வீட்டை குடியிருப்பு வீடாக காட்டாமல் விவசாய உபயோக சாலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் கிரையம் பெற்ற சமயத்தில் அது விவசாய உபயோக சாலையாக தான் இருந்தது. பின்னர் நான் மராமத்து பணி செய்து வீடாக மாற்றினேன். நான்  கிரையம் பெற்ற பின்பு அந்த விவசாய உபயோக சாலையை வீடாக மாற்றினேன் என்ற சொல்லும் நான் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் அவ்வாறு நான் கிரையம் பெற்ற பின்பு தான் விவசாய உபயோக சாலையை வீடாக மராமத்து செய்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பே குடியிருப்பு வீடாக தான் இருந்தது என்றும் அதில் வாதிகளும் 3-ம் பிரதிவாதியும் குடியிருந்து வந்தார்கள் என்றும் நீதிமன்ற ஆணையர் சென்று பார்த்த பின்பு நான் அந்த இடத்தை மராமத்து செய்து வீடாக மாற்றினேன் என்று பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானோ எனது தாயாரோ கிரையம் பெற்ற எந்த சொத்துக்களையும் சுவாதீன படுத்திக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. இந்த குடியிருப்பு சாலையை ஒட்டி கீழ் புறம் ஆலோபிளாக் கற்களை கொண்டு கட்டப்பட்ட சுற்றுச்சுவருடன்

கூடிய ஆஸ்பட்டாஸ் கூரை வேய்ந்த வடக்கு பார்த்து 20 மீ நீளமும் 9 மீ அகலமும் கொண்ட கிழமேலாக இரண்டு பகுதிகள் கொண்ட ஒரு கட்டிடம் இருந்தது என்ற நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது சரிதான். அந்த கட்டிடத்திற்குண்டான கதவு எண் எனக்கு தெரியாது. அந்த கட்டிடத்தில் குடிநீர் சுத்திகரிப்பு செய்யக் கூடிய இயந்திரம் தரைத்தளத்தில் நிரந்தரமாக பதிக்கப்பட்டுள்ளது என்றால் இயந்திரம் இருந்தது. ஆனால் அதன் அமைப்பு எனக்கு தெரியாது. அந்த இயந்திரங்களுக்கு தொடர்புடைய நிறைய சாமான்கள் அந்த அறையில் இருந்தது என்று நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அதே அறையில் மற்றொரு சிறிய அறை தனியாக தடுக்கப்பட்டு அதில் சாம்சன் நிறவனத்திற்கு சொந்தமான மைக்ரோ பயாலஜிகள் லேப் சம்மந்தமான பொருட்கள் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. அந்த சுவற்றில் ஸ்பிலிட் ஏசி பொருத்தப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. ஹைபிரஸ்சர் பம்ப் மைக்ரான் பில்ட்டர் பொருத்தப்பட்டுள்ளது என்றால் இயந்திரங்கள் இருந்தது ஆனால் எவை எவை என்று எனக்கு தெரியாது. 5000லிட்டர் கொள்ளளவு கொண்ட புரோடைக் வாட்டர் சேமிப்பு டேங்க் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட எவர்சில்வர் பாயிலர் நிலத்தோடு பொருத்தப்பட்டு இருந்ததாக நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுத்திகரிப்பு தண்ணீர் சேமிப்பதற்காக ஒரு கட்டிடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பில்லங் பைப்ஸ் சிறியது 2, பெரியது 2 அந்த சுவற்றில் பதிக்கப்பட்டு இருந்தது என்றால் எனக்கு தெரியாது. அது மட்டுமல்லாமல் கெமிக்கல் லேப் என்று தனியாக இருந்தது என்றால் சரிதான். இவை அனைத்தையும் நீதிமன்ற ஆணையர் புகைப்படம் எடுத்து அந்த புகைப்படங்களை அறிக்கையோடு தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் சரியாக பார்க்கவில்லை. இதுமட்டுமல்லாமல் எலெக்ட்ரிகல் ரூம் என்ற ஒரு தனியாக ஒரு அறை இருந்தது என்றால் சரிதான் ஆனால் அது சீட் போடப்பட்டுள்ளது. அதன் மின் இணைப்பு எண்.387 என்று குறிப்பிடப்பட்டு இருந்ததாக நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தண்ணீர் நிரப்புவதற்காக 2000

லிட்டர் கொள்ளளவு கொண்ட சுத்திகரிக்கபட்ட சிண்ட்டெக் டேங்க் ஒன்றும் 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சுத்திகரிக்கப்படாத சிண்ட்டெக் டேங்க் ஒன்றும் அங்கு இருந்து என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற 2014ம் ஆண்டே விவசாய உபயோக சாலையை வீடாக மாற்றிவிட்டேன். நான் 2014-ம் ஆண்டு 4வது மாதம் கிரையம் பெற்ற பின்பு ஜீன் மாதத்திற்குள் அதை வீடாக மாற்றிவிட்டேன் என்றால் சரிதான். மின் இணைப்பு எண்.363க்கு நான் கிரையம் பெற்ற 2014-ம் ஆண்டு முதல் இன்று வரை எனது பெயரில் மின் இணைப்பு கட்டணம் செலுத்தியதற்கான ஒரு பில்லும் என்னிடம் இல்லை என்றால் சரிதான். 363 மின் இணைப்பிற்கு பல ஆயிரக்கணக்கான யூனிட்டுகள் திருடப்பட்டதாக வரதராஜன் அபராதம் செலுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதிகாரிகள் நேரடியாக பார்வையிட்டு கையும் கலுவுமாக பிடித்து அதற்கு அபராதம் 3-ம் பிரதிவாதிக்கு விதிக்கப்பட்டு 3-ம் பிரதிவாதி செலுத்தியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. குடிநீர் சுத்திகரிப்பு ஆலை கட்டிடத்தியோ அதில் உள்ள இயந்திரங்களையோ அதற்கான மின் இணைப்பு எண்.387 யை எனது கிரைய பத்திரத்திலோ எனது தாயார் கிரைய பத்திரத்திலோ காட்டவில்லை என்றால் சரிதான். 387 மின் இணைப்பிற்கான மின்சாரத்தை நேரடியாக மின்பாதையில் இருந்து திருடப்பட்டு அதற்கு அதிகாரிகளால் அபராதம் விதிக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கான ரூபாய் அபராதம் செலுத்தப்பட்டு 3-ம் பிரதிவரித செலுத்தியுள்ளார் என்றும் 363, 387 மின் இணைப்பில் பலமுறை துண்டிக்கப்பட்டு அபராத தொகை செலுத்திய பின்பு மீண்டும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த குடியிருப்பு வீட்டில்ல நான் வசித்து வருகிறேனா அல்லது வாதிகள் மற்றும் அவரின் பாதுகாவலர் மற்றும் 3-ம் பிரதிவாதி, 3-ம் பிரதிவாதியின் மனைவி குடியிருந்து வருகிறார்களா என்றால் வாதிகளின் பாதுகாவலர், 3-ம் பிரதிவாதி, அவரது மனைவி ஆகியோர்கள் காலி செய்து கொள்வதாக சொன்னார்கள். ஆனால் அவர்கள் காலி செய்யவில்லை. நானும் எனது தாயாரும் கிரையம் பெற்ற சொத்துக்கள் விவசாயம் செய்யக் கூடிய பூமிகள் அல்ல என்றும் மாணாவாரி பூமிகள் என்றும் சொன்னால் சரிதான். ஆனால் அதில் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு இருந்தது. அந்து ஆழ்துளை கிணறு என்பது

தண்ணீர் சுத்திகரிப்பு ஆலைக்காக தண்ணீர் எடுப்பதற்காக அமைக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 04.06.2018-ம் தேதிய உத்தரவு பழனி உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் சார் ஆட்சியர் அவர்களுடைய செயல்முறை ஆணை என்றால் சரிதான். அது வா.சா.ஆ.15. வா.சா.ஆ.15-ல் சார் ஆட்சியர் செயல்முறை ஆணையர் சர்வே எண்.130/2எ5 ல் தண்ணீர் சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்பட்டு அதில் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு அதில் இருந்து எவ்வித அனுமதியின்றி தண்ணீர் உறிஞ்சி வியாபார நோக்கில் விற்பனை செய்யப்பட்டு வந்ததாக அவர் பார்வையிட்ட போது தெரிய வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த உத்தரவு 3-ம் பிரதிவாதிக்கும் வாதியின் பாதுகாவலருக்கும் இளந்தமரத்தோட்டம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த இளந்தமரத்தோட்டம் தான் வழக்கு சொத்து என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 3-ம்பிரதிவாதி இந்திய தர நிர்ணய அமைவனத்திடமிருந்து அவர் தண்ணீரை சுத்திகரிப்பு செய்யப்படுவதற்காக 20.05.2014-ம் தேதி பெற்றதற்கான ஆவணம் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.16. சார் ஆட்சியர் பூமியில் ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் எடுத்து வியாபார நோக்கில் பயன்படுத்துவதை நிறுத்துமாறு உத்தரவிட்ட பின்பு அந்த தண்ணீர் சுத்திகரிப்பு நிலயத்திற்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு எண்.387 யை துண்டிப்பதற்கு உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். அந்த உத்தரவின் அடிப்படையில் கே.கீரனூர் உதவி மின் பொறியாளர், இயக்கலும் பேணுதலும் அவர்கள் 3-ம் பிரதிவாதி 05.6.2018-ம் தேதி அந்த மின் இணைப்பை துண்டித்ததற்கு 3-ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட தபால் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிலும் 3-ம் பிரதிவாதி வழக்கு சொத்தான இளந்தமரத்துதோட்டத்தில் குடியிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அறிவிப்பு வா.சா.ஆ.17. குடிநீர் சுத்திகரிப்பு தொழில் செய்ததற்கு 3-ம் பிரதிவாதி 25.02.2017ம் தேதி கீரனூர் ஊராட்சிக்கு தொழில் வரி செலுத்தியதற்கான ரசீது என்றால் சரிதான். அந்த ரசீது வா.சா.ஆ.18. இந்த வழக்கு சொத்தில் உள்ள வீட்டிற்கு 25.02.2017ம் தேதி 3-ம் பிரதிவாதி வீட்டு வரி செலுத்தியதற்கான ரசீது என்றால் சரிதான். அது வா.சா.ஆ.19. 27.03.2018ம் தேதி மின் இணைப்பு எண்.363க்கு ராஜா பெயரில் மின்

கட்டணம் செலுத்தியதற்கான ரசீது என்றால் சரிதான். மின் இணைப்பு எண்.363க்கு ஆரம்பம் முதல் இன்று வரை ராஜா பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். சர்வே எண்.130/2எ5 3-ம் பிரதிவாதி வாங்குவதற்கு முன்பு ராஜாவுக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சரிதான். அந்த ராஜாவும் 3-ம் பிரதிவாதியும் 30.01.2012-ம் தேதி வா.சா.ஆ.9 பரிவர்த்தனை பத்திரம் எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பத்திரத்தின் அடிப்படையில் தான் அந்த வீடு இருக்கிற பகுதி 3-ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2025.03.19 10:18:08 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்